**GREENTECH QUALITY AND INNOVATION AWARD 2023 RECEIVED BY TNPL at "$2^{nd}$ ANNUAL GREENTECH QUALITY & INNOVATION SUMMIT & AWARDS 2023"**

M/s Greentech Foundation (GF), New Delhi invited applications for "**Greentech Quality and Innovation Award 2023**". **TNPL participated in Greentech Quality and Innovation Award 2023 under the category of Quality Improvement (Products / Processes / Services).**

The objective of the award is to encourage the implementation of strategies for improvement in operational standards and motivate & encourage to adopt best practices and become role models for others.

On behalf of TNPL, Team consists of Mr. B. Mahesh (GM – Paper Production) Team Leader, Mr. N. K. Periasamy (AGM – QC) Team coordinator, Mr. P. Annadurai, SM (QC), Dr. F. Amjath Khan DM (R&D) and M.S. Sathish AM (Process) Team Members have submitted the information in the prescribed questionnaire for the above award in the category of "**Quality Improvement (Products / Processes / Services)**"

The companies / organizations which applied for the award are subjected to two rounds of selection. Initially Quality and Innovations of high quality are recognized / preliminary evaluation after rigorous multi-stage evaluation process and assessed by "Jury" Members nominated by Greentech foundation. The short listed companies are instructed to give oral presentation by representative of nominee companies / organizations with Jury Members through Video conference. After that Greentech foundation will finalize award winners.

Various sectors like, Airlines, Metal and Mining, Textile, Rubber, Electrical and Electronics, Fertilizers, Paper, Services etc are the participant for the Award. **TNPL** is selected as **"WINNER"** under **Quality Improvement (Products / Processes / Services)" for outstanding achievements in Quality Improvement and awarded "Greentech Quality and Innovation Award 2023"**







The award was presented to **TNPL** by Mr. Mahabal Mishra, Former MP, Lok Sabha and Mr. K. Sharan, Chairman & CEO, Greentech Foundation during **$2^{nd}$ Annual Grentech Quality & Innovation Summit & Awards 2023"** on **$21^{st}$ August 2023** at Radisson Blu, New Delhi Airport, New Delhi.

**தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலைக்கு , 2 வது வருடாந்திர கிரீன்டெக் தரம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சி மாநாடு & விருதுகள் 2023, தரம் மற்றும் கண்டுபிடிப்பிற்காக விருது வழங்கபட்டது.**

புது தில்லியை தலைமை இடமாக கொண்டு செயல்படும் கிரீன்டெக் பவுன்டேசன் “**2 வது வருடாந்திர Greentech Quality and Innovation Summit Award 2023** ” க்கான விண்ணப்பங்களை அழைத்ததன் பெயரில் நமது நிறுவனம் “தர மேம்பாடு (தயாரிப்புகள்/ செயல்முறைகள்/ சேவைகள்)”பிரிவில் பங்கேற்றது.

செயல்பாட்டுத் தரங்களை மேம்படுத்துவதற்கான உத்திகளை செயல்படுத்துவதை ஊக்குவிப்பதும், சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக மாற ஊக்குவிப்பதும் இந்த விருதுத்திட்டத்தின் நோக்கமாகும்.

நமது நிறுவனம் சார்பாக **B. மகேஷ்** (பொது மேலாளர்-காகித உற்பத்தி)- குழு தலைவர், **N.K பெரியசாமி** (துணை பொது மேலாளர் - தர கட்டுப்பாடு) - குழு ஒருங்கிணைப்பாளர், P. அண்ணாதுரை (முதுநிலை மேலாளர்-தர கட்டுப்பாடு), முனைவர். F.அம்ஜத்கான் (துணை மேலாளர்-ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி) மற்றும் M.S. சதிஷ் (உதவி மேலாளர்-செயல்முறை) அடங்கிய குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

“தர மேம்பாடு (தயாரிப்புகள்/ செயல்முறைகள்/ சேவைகள்)” பிரிவில் மேற்கண்ட விருதுக்கு விண்ணப்பித்தவர்கள் இரண்டு சுற்று தேர்வுக்கு உட்படுத்தப்படுவர். முதலில் விண்ணப்பமானது தரம் மற்றும் கண்டுபிடிப்புகள் சார்ந்த நிபுணர்கள் குழுவால் பாரிசீலிக்கப்பட்டு, பின்னர் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களை விருது தொடர்பான பகுதிகளில் பரந்த அனுபவமுள்ள நீதிபதிகள் குழுவால் காணொலி கருத்தாடல் மூலம் மதிப்பிடப்பட்டு, அதன் பிறகு கிரீன்டெக் அறக்கட்டளை, விருது வென்றவர்களை இறுதி செய்தது.

இந்த விருதிற்கு வானூர்தி, உலோகம் மற்றும் கனிமம், ஆடை உற்பத்தி, ரப்பர், மின்சாரம் மற்று மின்னணுவியல், உரங்கள், காகிதம் மற்றும் சேவை போன்ற பல்வேறு துறைகளை சார்ந்த பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்றனர். **நமது நிறுவனம் 2 வது வருடாந்திர கிரீன்டெக் தரம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சி மாநாடு & விருதுகள் 2023 - இல் “தர மேம்பாடு (தயாரிப்புகள்/ செயல்முறைகள்/ சேவைகள்)” பிரிவில் வெற்றியாளராக தேர்வானது**.







**புது தில்லியில் 2023 ஆகஸ்டு 21 அன்று கிரீன்டெக் அறக்கட்டளை நடத்திய 2 வது வருடாந்திர கிரீன்டெக் தரம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சி மாநாடு & விருதுகள் 2023-** நிகழ்ச்சியில் இந்த விருதை **லோக்சபாவின் முன்னாள் M.P. திரு. மஹாபல் மிஸ்ரா மற்றும் கிரீன்டெக் அறக்கட்டளையின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. கே. சரண்** ஆகியோரால் **தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்திற்கு** வழங்கப்பட்டது.